**<u>சுருக்கம்</u>**

கேளிக்கை வரி - 2007 – 08 மற்றும் 2008 – 09 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு செய்யும் நிதியிலிருந்து 31.5.2009 நாளைய தேதியில் கிடைத்த வட்டித்தொகையினை சில பணிகளுக்காக வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.109** **நாள்:29.6.2009**

**படிக்கப்பட்டது:**

1)அரசு ஆணை (நிலை) எண்.75, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 01.06.2007.

2) அரசு ஆணை (நிலை) எண்.22, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 14.02.2008.

3)அரசு ஆணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 12.08.2008.

4)அரசு ஆணை (நிலை) எண்.262, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 24.12.2008.

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.49827/2008/ ப்பி 3 நாள் 15.6.2009.

**ஆணை:**

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ்த் திரைப்படங்களுக்கும் முழுவரி விலக்களிப்பட்டதினால் நகராட்சிகள், மாநகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுகட்ட ஒன்றாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் 2007–08 மற்றும் 2008–09

ஆண்டுகளில் தலா ரூ.27.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் அத்தொகையினை முக்கியத்துவம் மற்றும் சிறப்பு வாய்ந்த பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்ள இரண்டாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணைகள் மூலம் துறைத் தலைவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்டவாறு அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் கட்டமைப்பு நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வரப்படுகிறது. அவ்வாறு நிர்வகிக்கப்பட்டதில்

2007–08 மற்றும் 2008–09ஆண்டு நிதியான ரூ.54.00 கோடி (27.00 + 27.00) க்கு 31.5.2009 நாளைய தேதியில் ரூ.350.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று ஐம்பது இலட்சம் மட்டும்) வட்டியாக பெறப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநர் ஐந்தாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2) இந்நிலையில், பொள்ளாச்சி நகராட்சி கோட்டூர் சாலையில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்ட அரசு ஆணை (நிலை) எண். 47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.4.05–ல் அனுமதிக்கப்பட்ட ரூ.362.50 இலட்சத்திற்கான நிதி ஆதாரங்களுக்கும் கூடுதலான நிதி தேவைப்படுவதால், ரூ.250.00 இலட்சம் மானியமாக கோரலாம் என நகர்மன்றம் தீர்மானம் எண்.325, நாள் 29.5.2009–ல் தீர்மானித்துள்ளது என்றும், எனவே இந்நிதியினை கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் நகராட்சி நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொண்டுள்ளார். கம்பம் நகராட்சியில் , குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைக்க ரூ.140.65 இலட்சம் தேவைப்படுவதாகவும், அதில் பொது நிதியின் கீழ் ரூ.78.65 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளதாகவும், கூடுதலாக 16 பணிகளுக்கு தேவைப்படும் ரூ.62.00 இலட்சம் தொகையினை மான்யமாக பெறலாம் என நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.583, நாள் 12.6.09–ல் தீர்மானித்துள்ளது என்றும், எனவே இந்நிதியினை கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு கம்பம் நகராட்சி ஆணையர் நகராட்சி நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொண்டுள்ளார். கூடலூர் நகராட்சியில் தற்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றது என்றும், ரூ.31.00 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து பல்வேறு அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது என்றும், இந்நகராட்சியில் விரிவாக்கப்பகுதிகள் அதிகமாகப் பெருகி வருவதால் அப்பகுதி மக்களின் அடிப்படை வசதிகளான 11 தார் சாலைப் பணிகளை மேற்கொள்ள ரூ.40.00 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம்) மானியமாகப் பெறலாம் என நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.263, நாள் 10.6.09–ல் தீர்மானித்துள்ளது என்றும், எனவே இந்நிதியினை கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு கூடலூர் நகராட்சியின் செயல் அலுவலர் நகராட்சி நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொண்டுள்ளார். கவுண்டம்பாளையம் நகராட்சியில் மொத்தம் 119.02 கிமீ நீளமுள்ள சாலை பராமரிக்கப்பட்டு வருவதாகவும், இதில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் பகுதிகளில் மண்சாலை, பழுதடைந்த தார் சாலைகள் மற்றும் வடிகால் வாய்க்கால்கள் சீரமைக்க ரூ.115.30 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.65.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள ரூ.50.00 இலட்சம் தொகையினை மான்யமாகக் கோரிப் பெறலாம் என நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.697, நாள் 11.6.09–ல் தீர்மானித்துள்ளது என்றும், எனவே இந்நிதியினை கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யுமாறு கவுண்டம்பாளையம் நகராட்சியின் செயல் அலுவலர் நகராட்சி நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொண்டுள்ளார்.

3) எனினும், பொள்ளாச்சி நகராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.200.00 இலட்சமும் (ரூபாய் இருநூறு இலட்சம் மட்டும்), கம்பம் நகராட்சியில் சாலைகளை சீரமைக்க ரூ.50.00 இலட்சமும் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) , கூடலூர் நகராட்சியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.40.00 இலட்சமும் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்), மற்றும் கவுண்டம்பாளையம் நகராட்சியில் சாலைகளை சீரமைக்கவும், வடிகால்–வாய்க்கால்கள் அமைக்கும் பணிக்கு ரூ.50.00 இலட்சமும் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.340.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று நாற்பது இலட்சம் மட்டும்) கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து 31.5.09 நாளைய தேதியில் கிடைத்திருக்கும் வட்டித் தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் ஐந்தாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில், மேலே பத்தி 3 ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து 31.5.2009 நாளைய தேதியில் கிடைத்த வட்டித்தொகையிலிருந்து பொள்ளாச்சி நகராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.200.00 இலட்சமும் (ரூபாய் இருநூறு இலட்சம் மட்டும்), கம்பம் நகராட்சியில் சாலைகளை சீரமைக்க ரூ.50.00 இலட்சமும் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) , கூடலூர் நகராட்சியில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள ரூ.40.00 இலட்சமும் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்), மற்றும் கவுண்டம்பாளையம் நகராட்சியில் சாலைகளை சீரமைக்கவும், வடிகால்–வாய்க்கால்கள் அமைக்கும் பணிக்கு ரூ.50.00 இலட்சமும் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.340.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று நாற்பது இலட்சம் மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5) மேற்படி தொகையை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் கட்டமைப்புத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் விடுவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு விடுவிக்கும் போது மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான மொத்த தொகையில் 50 சதவிகித தொகையை முன்பணமாகவும், மீதி 50 சதவிகித தொகையை பணி முடிவுற்றவுடனும் வழங்க வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலை நகராட்சி நிர்வாக இயக்குநரே வழங்கலாம் என்றும், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த காலமுறை அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரால் அவ்வப்போது அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ,
சென்னை –35.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 5.
மாநிலக் கணக்காயர், சென்னை –18.
உள்துறை தணிக்கை அலுவலர்,
மாநிலக் கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை– 9
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர்,
சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந II ) துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**